சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – நெடுஞ்சாலைத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – காலஞ் சென்ற அரசு ஊழியர் திரு.ஜி.சண்முகம் என்பவரின் மகள் திருமதி.எஸ்.புவனேஸ்வரி என்பவர் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை – வெளியிடப்படுகிறது.

நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2டி) எண். 47

நாள்: 03.11.2023
சோபகிருது, ஐப்பசி 17,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 26.02.2021.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கடித எண்.49780/நிர்7/2003, நாள் 09.11.2022 மற்றும் 23.12.2023.

---

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை இயக்குநர் நெடுஞ்சாலைத்துறை அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் செங்கல்பட்டு (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்ட அலுவலகத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.ஜி.சண்முகம் என்பவர் பணியிடையே காலமானதையடுத்து மறைந்த அரசு ஊழியரின் மகள் திருமதி.எஸ்.புவனேஸ்வரி அவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரி அளித்த விண்ணப்பம் உரிய வழிமுறையில் பெறப்பட்டது என்றும் அதன்பேரில் தனியரது வயது, கல்வித்தகுதி மற்றும் தேவைப்படும் அனைத்து சான்றுகளும் அசலாக சரிபார்க்கப்பட்டது என்றும் தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் 29.12.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியருக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் 05.01.2021 மு.ப அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.எஸ்.புவனேஸ்வரி என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 05.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு அரசின் ஆணையினைப் பெற்றுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநரின் செயற்குறிப்பை மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி என்பவரின் பணியினை 05.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 25.
திருமதி.எஸ்.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளர் (நெ).
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை25. வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை–600018.

<u>நகல்:–</u>
மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள் (கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்) அலுவலகம், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
(கோ.எண்.3513676/எச்.எம்.1/2022)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3.11.23
பிரிவு அலுவலர்